# சபை வாழ்க்கை

## (அன்பும், உடன்-உணர்தலும்)

Transcribed from a message spoken in December, 2011 in Chennai

By *R.S. Milton*

### வாழ்க்கையின் இரண்டு பக்கங்கள்

தேவனுடைய பிள்ளைகள் என்ற முறையில் நாம் தேவனுக்குமுன் ஒரு தனிப்பட்ட வாழ்க்கை வாழ் கிறோம். இது ஒரு பக்கம். தேவனுடைய பிள்ளைகள் என்ற முறையில் நாம் ஒரு கூட்டு வாழ்க்கை யும் வாழ வேண்டும். இது இன்னொரு பக்கம். இந்த இரண்டும் சிலுவையின் இரண்டு புயங்கள் என்று வைத்துக்கொள்ளலாம். ஒன்று செங்குத்தான மரம். இது தேவனுக்குமுன்பாக நாம் வாழ்கிற வாழ்க்கை. இன்னொன்று கிடைமட்டமான மரம். இது மற்ற பரிசுத்தவான்களோடு நாம் சேர்ந்து வாழ்கிற வாழ்க்கை. இந்த எண்ணத்தை நாம் திரும்பத் திரும்பப் பயன்படுத்துவதால் நாம் இரண்டு வார்த்தைகளை மனதில் வைத்துக்கொள்வோம். கிறிஸ்துவில் ஒரு *தனிப்பட்ட வாழ்க்கை*, மற் றொன்று ஒரு *கூட்டு வாழ்க்கை.*

### ஆவிக்குரிய போஷாக்கும், பயிற்சியும்

என்றைக்கு நாம் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை விசுவாசித்து, அவரைப் பெற்றுக்கொண் டோமோ அன்றைக்கு நாம் கிறிஸ்துவை ஜீவனாகப் பெற்றுக்கொண்டோம் அல்லது கிறிஸ்து நம் ஜீவனாக மாறினார். இப்போது அவர் நம் ஜீவனாக இருக்கிறார். ஒவ்வொரு நாளும் அந்த கிறிஸ்து நம்மில் ஜீவிக்கிறார். நாம் எந்த அளவுக்கு ஆவியின்படி நடக்கிறோமோ, அந்த அளவுக்குக் கிறிஸ்து நம்மில் கண்கூடாக வெளியாகிறார். ஒவ்வொரு நாளும் கிறிஸ்துவாகிய ஜீவன் நமக்குள் வளர் கிறார். இது வளர்வதற்குத் தேவையான போஷாக்கை அவர் தம் வார்த்தையிலிருந்து, தம் சத்தி யத்தைத் தருகிறார் அல்லது மற்ற பரிசுத்தவான்களுடைய வாழ்க்கையிலிருந்து நமக்குத் தேவை யான போஷாக்கைத் தருகிறார். சபையில் ஒரு சாட்சியைக் கேட்கும்பொது அது நமக்குப் போஷாக் கைத் தருகிறதா இல்லையா? நாம் போஷிக்கப்படுகிறோமா இல்லையா? அதற்கொத்த சூழ்நிலை யில் அப்போது நம்மை யாரும் ஏமாற்றமுடியாது. "இஸ்ரவேலர்கள் எகிப்தைவிட்டுப் போகும்போது எகிப்தியருடைய பொன் வெள்ளி கம்மல் தங்கம் எல்லாவற்றையும் கொள்ளையடித்தார்கள். நாமும் அப்படிச் செய்யலாம்," என்று சொல்லி யாரும் நம்மை ஏமாற்றமுடியாது. "அதே கர்த்தர் நம்முடைய கர்த்தராயிருக்கிறார். வெட்டாத கிணறுகளையும், நட்டாத தோப்புக்களையும், கட்டாத வீடுகளையும் நமக்குத் தருவேன் என்று சொன்ன கர்த்தர் நம் கர்த்தர்," என்று வெறுமனே வசனத்தைவைத்து நம்மை யாரும் ஏமாற்றமுடியாது அல்லது நம் இக்கட்டான சூழ்நிலையைப் பயன்படுத்தி நம்மை யாரும் ஏமாற்றமுடியாது.

நாம் வளருவதற்குத் தேவையான போஷாக்கைக் கர்த்தர் நமக்கு ஒவ்வொரு நாளும் தருகிறார். வேதத்திலிருந்து ஏதாவது சத்தியத்தின் ஒரு அம்சத்தை நமக்கு வெளிப்படுத்துகிறார் அல்லது சகோதர சகோதரிகளின் வாழ்க்கையின்மூலமாக அவர் நமக்குப் போஷாக்கைத் தருகிறார். அவர்கள் கிறிஸ்துவை எப்படி அனுபவித்தார்கள் என்பதும் சத்தியம்தான். இது அனுபவித்த சத்தியம். இது அதைவிட மேலான போஷாக்கு. அது மட்டும் அல்ல.

போஷாக்கோடுகூட தேவன் நமக்கு சில பயிற்சிகளையும் ஒழுங்குசெய்கிறார். எந்த மிகச் சிறந்த பயிற்சியாளனும் தான் பயிற்சி கொடுப்பவர்களுக்கு சில பயிற்சிகளை ஒழுங்குசெய்வான். நேற்றை விட இன்று சற்று 0.1 வினாடி அதிக வேகமாக ஓடுவதற்கு அல்லது 1 சென்டிமீட்டர் அதிகமாகத் தாண்டுவதற்கு அவன் பயிற்சி கொடுக்கிறான். அதுபோல, தேவன் நமக்குப் பயிற்சிகளை ஒழுங்கு செய்கிறார். நம் குடும்பத்தில், நம் பள்ளிக்கூடத்தில், நாம் வேலைபார்க்கும் இடத்தில், நம் குடும்பத் தில் உள்ள நம் பெற்றோர், பிள்ளைகள், அண்ணன், அக்கா, தம்பி, தங்கைகள் இவர்களோடு வாழ்கிற வாழ்க்கை, பள்ளிக்கூடத்தில் வாழ்கிற வாழ்க்கை, இவையெல்லாவற்றிலும் தேவன் நமக்கு சூழ்நிலையை அமைக்கிறார். சூழ்நிலைகள் மூலமாகத் தேவன் நமக்குப் பயிற்சி தருகிறார்.

கிறிஸ்துவாகிய ஜீவன் நமக்குள் வளர வேண்டும் அல்லது கிறிஸ்துவின் இலட்சணங்கள் நமக்குள் உருவாக வேண்டும் என்பதுதான் தேவனுடைய நோக்கம். நமக்குள் கிறிஸ்து இருக்கிறார். ஆனால், கிறிஸ்துவின் இலட்சணங்கள் நமக்குள் இன்னும் உருவாகவில்லை. இப்படி நமக்குப் போஷாக்கைக் கொடுத்து, பயிற்சி கொடுத்து ஒவ்வொரு நாளும் அவர் கிறிஸ்துவை நமக்குள் வளர்க்கிறார்.

கிறிஸ்துவின் குணாம்சங்கள், கிறிஸ்துவின் அனுபவங்கள் ஆகியவைகளை நம்முடைய குணாம்சங் களாக, நம்முடைய அனுபவங்களாக அவர் மாற்றுகிறார். கிறிஸ்துவின் குணாம்சங்கள் என்னவென் றால் அவருடைய அன்பு, அவருடைய நீதி, அவருடைய வெளிச்சம், அவருடைய பரிசுத்தம், அவ ருடைய பண ஆசையின்மை, அவருடைய சிலுவை மரணம், அவருடைய உயிர்த்தெழுதல், எல்லா வற்றையும் மேற்கொண்ட அவருடைய பரமேறுதல், இவையெல்லாவற்றையும் நமக்குள் உருவாக்கு வதுதான் தேவனுடைய நோக்கம். அப்படிப்பட்ட கிறிஸ்துவை நம்மில் வாழச் செய்வதுதான் வளர்ச்சி.

இதைத்தான் பரிசுத்த ஆவியானவர் நம்மில் ஒவ்வொருநாளும் செய்துகொண்டிருக்கிறார். நாம் மறந்துவிட்டால் அதைச் செய்வாரா? ஒருவேளை நாம் மறந்துவிட்டோம் என்று வைத்துக்கொள் வோம். அப்போதும் கிறிஸ்துவாகிய ஜீவன் நம்மில் வளர்வதற்குப் பரிசுத்த ஆவியானவர் நம்மில் வேலைசெய்வாரா? வேலைசெய்வார்.

இதற்கு நான் ஒரு நல்ல எடுத்துக்காட்டுத் தருகிறேன். தேர்வு எழுதிக்கொண்டிருக்கும்போது கிறிஸ்துவாகிய ஜீவன் நமக்குள் இருக்கிறார் என்று நம் நினைவில் இருக்கவா செய்கிறது? இல்லை. அல்லது IT Professional அவர்களை எடுத்துக்கொள்வோம். நான் அவர்களை ET Professional என்று சொல்வதுண்டு. Extra terrestrial Professional. அவர்களை நான் பிரமிப்புடன் பார்ப்பேன். காலை யிலிருந்து மாலைவரை அவர்களுடைய நினைவு கிறிஸ்துவையும், பரிசுத்த ஆவியானவரையும்பற்றி இருக்காது. ஆனாலும், அவர்களில் பரிசுத்த ஆவியானவர் வேலைசெய்து கொண்டிருக்கிறாரா இல்லையா? வேலைசெய்துகொண்டிருக்கிறார். ஏற்ற சமயத்தில் பரிசுத்த ஆவியானவர் நம் கவனத் தைத் திருப்புவார். இவரை நாம் நம்பலாம். இது ஒரு இலகுவான வாழ்க்கை. ஒருவேளை பரிசுத்த ஆவியானவர் மறந்துவிட்டால்! அவர் மறக்கமாட்டார். வேண்டுமானால் நாம் அவரை உதாசீனம் பண்ணலாமேதவிர அவர் மறக்கமாட்டார். அந்த signal strength வேண்டுமானால் கொஞ்சம் பலவீன மாக இருக்கலாம்.

இப்போது மக்கள் எல்லாருமே mobile phone வைத்திருப்பதால் இந்த வார்த்தையைப் பயன்படுத்த முடியும். முந்தி electronic communication படித்தவர்கள் மட்டும்தான் இந்த வார்த்தையைப் பயன் படுத்த முடிந்தது. இப்போது பால்காரர் முதற்கொண்டு எல்லாரும் “signal கிடைக்கவில்லை” என்ற வார்த்தையைப் பயன்படுத்த முடியும் அல்லது “signal பலவீனமாகிவிட்டது” என்கிறார்கள். Signal பலவீனமாக இருக்கலாம். ஆனால், பரிசுத்த ஆவியானவர் நம் ஆவியில் கிறிஸ்துவை வெளியரங்க மாக்குவார். அவர் தோற்றுப்போகவே மாட்டார்.

## இரண்டு வாழ்க்கையும் தொடர்புடையவை

சரி, இந்த வளர்ச்சி எதற்காக? எதற்காகவென்றால், தேவனுடைய வீட்டிலே அல்லது தேவனுடைய குடும்பத்திலே தேவனுடைய பிள்ளைகள் ஒருவரோடொருவர் கூட்டுவாழ்க்கை வாழ்வதற்காக. கூட்டு வாழ்க்கை இல்லை. ஆனால், தனிப்பட்ட வாழ்க்கையில் வளர்ச்சி இருக்கிறது. இதைப்பற்றி நாம் ஏற்கெனவே பார்த்திருக்கிறோம். இந்த இரண்டும் ஒன்றோடொன்று மிக நெருங்கிய தொடர்புடை யது. கூட்டு வாழ்க்கை இல்லையென்றால் தனிப்பட்ட வாழ்க்கையில் கிறிஸ்துவின் வளர்ச்சி மட்டுப் படுத்தப்படும். கிறிஸ்துவின் நிறைவான வளர்ச்சியை நாம் பெறவேமுடியாது கூட்டுவாழ்க்கை இல் லாமல். அதுபோல தனிப்பட்ட வாழ்க்கையில் கிறிஸ்துவை அனுபவிக்காமல் நாம் கூட்டு வாழ்க்கை வாழவும் முடியாது. எனவே, தனிப்பட்ட வாழ்க்கையும் கூட்டு வாழ்க்கையும் ஒன்றையொன்று சார்ந் திருக்கின்றன. இதில் நாம் தவறுசெய்கிற வாய்ப்பு இருக்கிறது. தனிப்பட்ட வாழ்க்கையில் கிறிஸ்து வளரவேண்டும் என்பதைப்பற்றி அக்கறைப்படாமல் இருந்துவிட்டு நாம் கூடிவாழ்வதால் மட்டுமே எல்லாம் சரி என்று நாம் நினைத்துவிடக்கூடாது. அதுபோல, என் சகோதர சகோதரிகளோடு கூடி வாழ்வதைப்பற்றி எனக்கு எந்த அக்கறையும் இல்லாமல், “என் தனிப்பட்ட வாழ்க்கையில் நான் கிறிஸ்துவை ஒவ்வொரு நாளும் அனுபவிக்கிறேன். கிறிஸ்து எனக்குள் வாழ்கிறார” என்று சொல் வது வஞ்சகம். ஏனென்றால், கிறிஸ்துவின் முழுமையான வளர்ச்சிக்கு கூட்டு வாழ்க்கை அவசியம்.

இப்போது நாம் ஒரு சில வசனங்களை வாசிப்போம். எபேசியர் 2:12-16: “முன்னே தூரமாயிருந்த நீங்கள் இப்பொழுது கிறிஸ்து இயேசுவுக்குள் கிறிஸ்துவின் இரத்தத்தினாலே சமீபமானீர்கள். எப்படியெனில், அவரே நம்முடைய சமாதான காரணராகி, இருதிறத்தாரையும் ஒன்றாக்கி, பகையாக நின்ற பிரி வினையாகிய நடுச்சுவரைத் தகர்த்து, சட்டதிட்டங்களாகிய நியாயப்பிரமாணத்தைத் தம்முடைய மாம்சத்தினாலே ஒழித்து, இருதிறத்தாரையும் தமக்குள்ளாக ஒரே புதிய மனுஷனாகச்

சிருஷ்டித்து, இப்படிச் சமாதானம் பண்ணி, பகையைச் சிலுவையினாலே கொன்று, அதினாலே இருதிறத்தாரையும் ஒரே சரீரமாக தேவனுக்கு ஒப்புரவாக்கினார்".

இது ஒரு கடினமான வசனம் என்பதை நான் அறிவேன். எனவே, இதை வாசித்தவுடன் "இது wonderful verse, marvelous verse" என்று நீங்கள் பரவசமடைந்துவிடுவீர்கள் என்று நான் நினைக்க வில்லை. ஆனாலும், அதை வாசித்து வைத்துக்கொள்வோம்.

கலாத்தியர் 6:1, 2, 5: "சகோதரரே, ஒருவன் யாதொரு குற்றத்தில் அகப்பட்டால், ஆவிக்குரியவர் களாகிய நீங்கள் சாந்தமுள்ள ஆவியோடே அப்படிப்பட்டவனை சீர்பொருந்தப்பண்ணுங்கள். நீயும் சோதிக்கப்படாதபடிக்கு உன்னைக்குறித்து எச்சரிக்கையாயிரு. ஒருவர் பாரத்தை ஒருவர் சுமந்து இப் படியே கிறிஸ்துவினுடைய பிரமாணத்தை நிறைவேற்றுங்கள். அவனவன் தன்தன் பாரத்தைச் சுமப்பானே".

ரோமர் 12:15: "சந்தோஷப்படுகிறவர்களுடனே சந்தோஷப்படுங்கள், அழுகிறவர்களுடனே அழுங்கள்".

**சபை வாழ்க்கை**

இப்போது பேசப்பேச சில காரியங்கள் தெளிவாகும். சபை வாழ்க்கை என்றால் என்ன அல்லது சபை வாழ்க்கை வாழ்வது என்றால் என்ன? இதைப்பற்றி ஒரு பக்கம் கிறிஸ்தவர்களாகிய நம் முடைய சகோதர சகோதரிகளைப் பார்க்கிறோம். இன்னொரு பக்கம் நிறையப்பேர் புத்தகங்கள் எழுதியிருக்கிறார்கள். நமக்கு சபை வாழ்க்கையைப்பற்றித் தெரியுமா என்ற கேள்விக்குப் பதில் 'கொஞ்சம் தெரியும், நிறையத் தெரியாது.' 'அறவெ தெரியாது' என்று நாம் கூற முடியாது. 'கொஞ் சம் தெரியும். ஆனால் நிறையத் தெரியாது.' நாம் கற்றுக்கொண்டேயிருக்கிறோம். நாம் கற்றுக் கொள்ள கற்றுக்கொள்ள நிறைய adjustment செய்வோம்.

நம்மிடம் சபை வாழ்க்கையைப்பற்றிய எந்த manualவும் இல்லை. Normal Christian Church Lifeகூட சபை வாழ்க்கையைப்பற்றிய manual இல்லை. தேவனுடைய பிள்ளைகள் எல்லாரோடும் நமக்கு உறவு இருக்கிறது. நாம் வாசித்த எபேசியர் வசனத்தில் புறவினத்தாரை, மனிதர்களை, ஒருவரிட மிருந்து ஒருவரைப் பிரிக்கிற பல காரணிகள் இருக்கின்றன. பல எடுத்துக்காட்டுகள் கொடுக்கலாம். புறவினத்தார் யூதர்கள், நாகரீகமுள்ளவர்கள் நாகரீகமற்றவர்கள், படித்த பண்பாளர்கள் படிக்காத வர்கள். இது புதிய ஏற்பாட்டுக் காலத்திலேயே இருந்தது. அடிமைகள் சுயாதீனர்கள், ஆண்கள் பெண்கள். இவைகளெல்லாம் மனிதர்களை ஒருவரிடமிருந்து ஒருவரைப் பிரிக்கிற காரணிகளுக்கு எடுத்துக்காட்டுகள். அவ்வளவுதான். இதை ஒரு கோட்பாடாகத்தான் சொல்லமுடியும். புதிய ஏற்பாட் டுக் காலத்தில் இருந்த அடிமைகள் சுயாதீனர்கள் என்ற காரணி இன்றைக்கு இல்லாமல் போகலாம். ஆனால், அது இன்னொரு வடிவத்திலே இருக்கலாம். அது மட்டும் அல்ல 20 நூற்றாண்டுகளில் இன்னும் புதிய காரணிகளை நாம் உற்பத்திசெய்திருக்கிறோம்.

இந்த உலகத்தில் 2 மனிதர்கள் சேர்ந்து வாழ்வது அல்லது வேலைசெய்வது என்பதுதான் இந்த உலகத்தின் மாபெரும் பிரச்சினை. அதனால்தான் marriage counsel என்பது மிகச் சிறப்பான தொழில். ஒரு மனிதனை ஒரு மனுஷியோடு இசைவாக வாழ வைப்பது பலம். அதற்குப் பிரயத்தனம் பண்ண வேண்டியிருக்கிறது.

புதிய ஏற்பாட்டுக் காலத்தில், புதிய ஏற்பாடு எழுதப்பட்ட காலகட்டத்தில், இருந்த காரணிகளி லெல்லாம் மிகக் கொடுமையான காரணி என்னவென்றால் யூதர்களுக்கும் புறவினத்தார்களுக்கும் நடுவே இருந்த காரணி. ஒரு யூதனால் ஒரு புறவினத்தானை ஏற்றுக் கொள்ளவே முடியாது. யூத னைப் பொறுத்தவரை ஒரு புறவினத்தான் என்பவன் ஒரு நாய். ஒரு யூதன் மூன்று காரணங் களுக்காக ஜெபிப்பானாம். "ஆண்டவரே நீர் என்னை ஒரு புறவினத்தானாக சிருஷ்டிக்காததற்காக நான் உம்மைத் துதிக்கிறேன். இரண்டாவது, நீர் என்னை ஒரு பெண்ணாக சிருஷ்டிக்காததற்காக நான் உம்மைத் துதிக்கிறேன்". மூன்றாவது வேறு ஏதோ சொல்வார்கள். முதல் துதி எதிர்மறையான துதி. "நீர் என்னை ஒரு புறவினத்தானாகிய நாயாக சிருஷ்டிக்காததற்காக நான் உம்மைத் துதிக் கிறேன்".

நம்முடைய நாட்டில் உயர்ந்த ஜாதியில் பிறந்தவன் தாழ்ந்த ஜாதியில் பிறக்காததற்காக சந்தோஷப் படுகிறான். தாழ்ந்த ஜாதியில் பிறந்தவன் அதற்காக வருந்துகிறான். எவ்வளவோ துன்பங்களை அவன் சந்திக்க வேண்டியிருக்கிறது. இது ஓர் எடுத்துக்காட்டு.

பவுல் இதைப் பகையாகிய நடுச்சுவர் என்று சொல்லுகிறார். இது உருவகமாகப் பேசுவதாகும். ஜாதி ஒரு காரணி. இந்தக் காரணிகளுக்கு பவுல் உருவகமாகப் பேசுகிற வார்த்தை ***நடுச்சுவர்***.

**நடுச்சுவரும், இயேசுவின் சிலுவையும்**

ஒரு மனிதனை இன்னொரு மனிதனிடமிருந்து பிரிக்கிற, ஒரு மனிதக் கூட்டத்தை இன்னொரு மனிதக் கூட்டத்திடமிருந்து பிரிக்கிற, நடுச்சுவர்கள் மனித நாகரிகத்தில் நிறைய இருக்கின்றன. நேர்மறையானதும் இருக்கின்றன; எதிர்மறையானதும் இருக்கின்றன. இவையெல்லாவற்றையும் கிறிஸ்து உடைத்தார் என்று எழுதப்பட்டிருக்கிறது. எங்கு உடைத்தார்? சிலுவையில். அப்படியானால் இந்த நடுச்சுவரை உடைக்க என்ன தேவைப்பட்டது. இயேசுகிறிஸ்துவின் சிலுவை மரணம் தேவைப்பட்டது. இதை நாம் யோசித்துப்பார்க்க வேண்டும். இந்த இருதிறத்தாரையும் அவர் ஒன்றாக்கினார், சமாதானம் பண்ணினார். அது மட்டும் அல்ல. இருதிறத்தாரையும் தேவனோடும் அவர் சமாதானம் பண்ணினார். இயேசுகிறிஸ்து தம்முடைய சிலுவைமரணத்தாலே நடுச்சுவர்களை உடைத்து இருதிறத்தாரையும் அல்ல, பலதிறத்தார்களையும் ஒன்றாக்கியிருக்கிறார். ஒன்றாக்கப்பட்ட இந்த உயிரிக்குப் பெயர்தான் சபை, கிறிஸ்துவின் சரீரம் அல்லது தேவனுடைய குடும்பம். கர்த்தருக்கு ஸ்தோத்திரம்.

இது எப்போது உண்மையாகுமென்றால், எடுத்துக்காட்டாக, ஒரு சகோதரனுக்கும் இன்னொரு சகோதரனுக்கும் இடையே நிறைய நடுச்சுவர் இருக்கும்போது ஒருவர் சுவை இன்னொருவருக்குப் பிடிக்காது. “அவனுடைய socks நாற்றம் அடிக்கிறது” என்று அருவருக்கிற சகோதரர்கள் உண்டு. இது இயற்கை; அது நாறுகிறது, இது நாறுகிறது. இவைகளெல்லாம் அற்பமான காரியங்களாகத் தோன்றலாம். இவைகளை நம்மால் பின்பற்றவே முடியாது. எப்படி சொல்வது என்று தெரியாது. சொன்னால் மற்றவர்கள் புண்பட்டுவிடுவார்கள். “உன் தலையில் பேன் இருக்கிறது,” என்று சொன்னால் எத்தனைபேர் சகித்துக்கொள்வார்கள்? பெரிய எடுத்துக்காட்டுகள் வேண்டாம். சிறிய சிறிய எடுத்துக்காட்டுகள். இவைகளை நம்மால் ஏற்றுக்கொள்ள முடியாது. இவைகள் நாளடைவில் என்னவாகும் என்றால் நடுச்சுவராக மாறிவிடும். அந்தச் சகோதரனை அல்லது சகோதரியை நம் குடும்பத்தின் அவயவமாக, அங்கமாக அல்லது கிறிஸ்துவினுடைய சரீரத்தின் ஓர் அவயவமாக மனதார ஏற்றுக்கொள்ள முடியாது. அதற்குக் கிறிஸ்துவின் சிலுவை அவசியம். பல் நாறுகிற சகோதரனை அல்லது socks நாறுகிற சகோதரனை எடுத்துக்காட்டாகச் சொல்லுகிறேன். அவர்களைப் பொறுத்தவரை அவன் காட்டுமிராண்டி. ஒரு கிரேக்கனைப் பொறுத்தவரை அவன் ஒரு காட்டுமிராண்டி. கிறிஸ்துவின் சிலுவை எப்படி நடுச்சுவர்களை ஒழித்ததோ அதுபோல கிறிஸ்துவின் சிலுவையை நம் வாழ்க்கையில் அனுபவிக்க அனுபவிக்கத்தான் நடைமுறையில் அல்லது நிஜத்தில் சகோதரனுக்கும் சகோதரனுக்கும் அல்லது தேவனுடைய குடும்பத்தில் தேவனுடைய ஒரு பிள்ளைக்கும் இன்னொரு பிள்ளைக்கும் இடையே இருக்கிற நடுச்சுவர்களெல்லாம் தகர்க்கப்படும். ஏற்கெனவே சொன்னதுபோல கிறிஸ்துவின் சிலுவை எதைக் கொண்டுவரும்? வேதனை, வலி. “ஆண்டவரே, பல் நாறுகிற இந்தச் சகோதரனை என்னால் நேசிக்க முடியவில்லை,” என்று நாம் ஆண்டவரிடம் சொல்லுவோம். “தன்னைக்குறித்து பெருமையாகப் பேசுகிற இந்த சகோதரனை என்னால் நேசிக்க முடியவில்லை, ஆண்டவரே,” என்று கூறுவோம். எந்த அளவுக்கு நாம் கிறிஸ்துவின் சிலுவை மரணத்தை அனுபவிக்கிறோமோ அந்த அளவுக்குத்தான் நம்முடைய உறவுகள் வலுவாக இருக்கும், பலமாக இருக்கும். உறவுகள் இருக்கின்றன. ஆனால் மிகவும் பலவீனமான உறவுகள்.

இயற்கை உலகத்தில் ஓர் எடுத்துக்காட்டு சொல்லவேண்டும் என்றால் bond என்று சொல்வார்கள். chemistry bondயைப்பற்றிப் பேசுவார்கள். விதவிதமான bondகள் இருக்கின்றன. சில bondகள் மிகவும் வலுவானவை. ஓர் அணுவையும் இன்னொரு அணுவையும், ஒரு மூலக்கூறையும் இன்னொரு மூலக்கூறையும், கட்டியிணைக்கிற ஒரு இணைப்பு இருக்கிறது. அதுபோல தேவனுடைய பிள்ளைகளை ஒருவரோடொருவர் கட்டியிணைக்கிற ஒரு bond இருக்கிறது. அந்த bondஇன் பெயர் அன்பு. இந்த bond எந்த அளவுக்கு வலுவானதாக இருக்கும் என்றால் எந்த அளவுக்கு இந்த உறவில் கிறிஸ்துவின் சிலுவை மரணம் பிரயோகிக்கப்பட்டிருக்கிறதோ, அந்த அளவுக்கு அந்த உறவு வலுவானதாக இருக்கும். அது கணவன் மனைவி உறவாக இருந்தாலும் சரி, பெற்றோர் பிள்ளைகள் உறவாக இருந்தாலும் சரி, சகோதர சகோதரிகள் உறவாக இருந்தாலும் சரி, வேலை செய்யும் இடத்தில் ஒருவருக்கொருவர் உள்ள உறவாக இருந்தாலும் சரி அல்லது தலைவர் தொண்டர் உறவாக இருந்தாலும் சரி, மேலாளர் உதவியாளர் உறவாக இருந்தாலும் சரி. மற்றவர்களுக்கு சிலுவை மரணம் தெரியாமல் போகலாம். அதனால் அவர்கள் பிரயோகிக்கமாட்டார்கள். அதனால் யார்தான்

பிரயோகிக்க வேண்டும்? நாம்தான் பிரயோகிக்க வேண்டும். "உங்களால் கூடுமானால் எல்லாரோடும் சமாதானமாயிருக்க நாடுங்கள்" என்று ரோமரில் வாசிக்கிறோம்.

**நடுச்சுவர்களை உருவாக்குதல்**

ஒன்று, கூட்டு வாழ்க்கையில், சபை வாழ்க்கையில் முதல் அம்சம் நடுச்சுவர்களைத் தகர்க்கிற அன்பு. நாம் தேவனுடைய எல்லாப் பிள்ளைகளோடும் ஒன்றுதான். ஆனால், நடைமுறையில் நிறைய சிக்கல்கள் இருக்கின்றன. என்ன சிக்கல் வரும் என்றால் இப்போது Assemblies of God சபையிலுள்ள தேவனுடைய பிள்ளைகளை எடுத்துக்கொள்வோம். CPMயிலுள்ள தேவனுடைய பிள்ளைகளை எடுத்துக்கொள்வோம். தேவன் ஏற்கெனவே தடுப்புச்சுவர்களைத் தகர்த்துவிட்டார். ஆனால், இவர்கள் புதுத் தடுப்புச்சுவர்களைக் கட்டியிருக்கிறார்கள். இந்தத் தடுப்புச்சுவர்களை நாமும் கட்டுகிற வாய்ப்பு உண்டு. நாமெல்லாம் பெரிய ஞானிகள் இல்லை. இவர்களுடைய பிரதானமான தடுப்புச்சுவர் உபதேசங்களாலும் அல்லது மதப் பழக்கவழக்கங்களாலும் உண்டாக்கப்பட்டிருக்கிறது. அவர்களுடைய thesisக்கு ஒரு format இருக்கும். எடுத்துக்காட்டாக CPMயில் எல்லாரும் பரிசுத்த ஆவியில் நிறைந்து அந்நிய பாஷையில் பேசுகிறார்கள் என்று வைத்துக்கொள்வோம். இப்போது நான் அவர்களுடைய கூட்டத்துக்குப் போயிருக்கிறேன். இப்போது நான் என்ன செய்வேன்? என்னால் முடிந்தால் நானும் பரிசுத்த ஆவியினால் நிறைந்து அந்நிய பாஷையில் பேசுகிறேன் அல்லது குறைந்தபட்சம் நான் அமைதியாக இருக்கலாம். எல்லாரும் கைதட்டுகிறார்கள். நானும் கைதட்டுகிறேன். ஆனால், யாராவது சவால் விட்டால் நான் அதைச் செய்யமாட்டேன். "நீ கைதட்டு, இல்லையென்றால் உன்னிடம் பரிசுத்த ஆவியானவர் இல்லை," என்று சொன்னால் நான் கைதட்ட மாட்டேன். இது வேறு விஷயம். ஆனால், அவர்கள் தங்களுடைய உபதேசங்களாலும், மதப் பழக்கவழக்கங்களாலும் சில தடுப்புச்சுவர்களை எழுப்பிவைத்திருக்கிறார்கள்.

நான் கொஞ்சம் யோசித்துப்பார்க்கும்போது என்ன தோன்றுகிறது என்றால் 1 கொரிந்தியர் 1, 2, 3ஆம் அதிகாரங்கள்தான் இந்தத் தடுப்புச்சுவர்களுக்கான ஆதிமூலம் என்று தோன்றுகிறது. "நான் பவுலைச் சார்ந்தவன், நான் அப்பொல்லோவைச் சார்ந்தவன், நான் கேபாவைச் சார்ந்தவன், நான் கிறிஸ்துவைச் சார்ந்தவன்". இந்த உபதேசங்களையும், இந்த மதப்பழக்கங்களையும் உருவாக்கியது யார்? மனிதர்கள்தானே. தலைவர்களாக இருக்கிற மனிதர்கள். ஆகையால், இந்தத் தடுப்புச்சுவர்களுடைய ஆதிமூலம் யார்தான்? சில வலுவான தலைவர்கள். அவர்களிடம் ஆவிக்குரிய கொடைகள் இருந்திருக்கலாம். ஏன்? ஜீவனில் வளர்ந்தவர்களாகவும் இருந்திருக்கலாம். ஆவிக்குரிய கொடைகளும், கொஞ்சம் வளர்ச்சியும் இருந்திருந்தால்தானே அவர்களை மக்கள் தலைவர்களாக ஏற்றுக்கொண்டிருப்பார்கள். ஆகையால், ஆவிக்குரிய கொடைகளும், வளர்ச்சியும் உள்ள சகோதர சகோதரிகள் மிகவும் ஜாக்கிரதையாக இருக்க வேண்டும். நாம் புதிய தடுப்புச்சுவர்களை உருவாக்குகிற வாய்ப்பு இருக்கிறது. சரி, இப்போது இந்தச் தடுப்புச் சுவர்களுக்குள் சகோதர சகோதரிகள் இருக்கிறார்கள். நாம் சொல்லுகிறோம். "நீங்கள் எங்கள் சகோதர சகோதரிகள்தான்". ஆனால் அவர்கள் சொல்லுகிறார்கள். "நீங்கள் இப்போது இந்தத் தடுப்புச்சுவரை ஏறிக்குதித்து உள்ளே வாருங்கள்". நான் சொல்லுகிறேன். "நான் வரத்தயார். ஏறிக்குதித்து இல்லை. தடுப்புச்சுவரைத் தகர்த்துவிட்டால் வரத் தயார். ஆனால், நான் தகர்க்கமாட்டேன். எழுப்பியது நீங்கள். தகர்க்க வேண்டியதும் உங்களுடைய பொறுப்பு". நான் வந்து சுவருக்கு முன்னால் நிற்கலாம். யார் சுவரை எழுப்பினார்களோ, அவர்கள் அதை உடைக்க வேண்டும். இது அவர்களுடைய பொறுப்பு.

இதைப்பற்றி கலாத்தியர் 2இல்கூட பவுல் பேசுகிறார். நாம் உடைத்ததை நாமே மீண்டும் கட்டலாமோ என்று வேறு context இல் பேசுகிறார். நம்மால் முடிந்தவரை அவர்களுடன் நாம் சமாதானமாக இருக்க வேண்டும். இந்தத் தடுப்புச்சுவருக்கு அப்பாற்பட்டும் நாம் அவர்களுடன் சேர்ந்து வாழ முடியும். எப்படி வாழ முடியும்? ஒருவேளை 'Praise the lord, brother' என்று சொல்லலாம். அவர்களுக்குள் இருக்கும் கிறிஸ்து வளர்வதற்கு அவரிடம் ஏதோ இருக்கிறது என்று அவர் சொல்லுகிறார். ஆனால், எனக்கு அப்படித் தோன்றவில்லை. அப்படியானால் நான் அவருடன் அதிகமான உறவு வைத்துக்கொள்ள வேண்டிய அவசியம் இல்லை. அவர் நம் பகைவர் இல்லை. ஆனால் உறவுவைத்துக் கொள்வதற்கான வாய்ப்பு மிகக் குறைவு

**நடுச்சுவர்களைத் தவிர்த்தல்**

இது ஓர் அற்றம். நாமே அந்தத் தடுப்புச்சுவர்களை உருவாக்குகிற வாய்ப்பு இருக்கிறதா? இருக்கிறது. எந்த அளவுக்கு நாம் அதைத் தவிர்க்க முடியுமோ அந்த அளவுக்கு நாம் அதைத் தவிர்க்கலாம். எடுத்துக்காட்டாக, "ஒரேவொரு தலைவனை நாங்கள் பின்பற்றுகிறோம். ஒரேவொரு ஆவிக்

குரிய தலைவனை நாங்கள் பின்பற்றுகிறோம்," என்று சொல்பவர்களுக்கு பெரிய ஆபத்து காத் திருக்கிறது. இது நிறைய தடுப்புச் சுவர்கள் உருவாவதற்கான ஆதிமூலமாக இருக்கிறது. தேவ னுடைய கோட்பாடு இருக்கிறதே! அது எப்போதுமே இரண்டு அல்லது மூன்று பேர். பவுல் மட்டும் அல்ல; யோவானும் பேதுருவும் இருக்கிறார்கள். குறைந்த பட்சம் இரண்டு பேரைத் தேவன் சம காலத்தில் பயன்படுத்தினார். பவுல் ஒரு தலைசிறந்த ஊழியக்காரனாக இருந்தபோதுகூட தேவன் யோவானையும், பேதுருவையும் இன்னும் பயன்படுத்தினார். சொல்லப்போனால், புதிய ஏற்பாட்டின் கடைசிப் புத்தகமாகிய திருவெளிப்பாட்டைக் கர்த்தர் யோவானைக் கொண்டு எழுதவைத்தார். எனவே "இவர் தலைசிறந்த ஊழியர், அதற்கு அடுத்தபடி இவர்தான் தலைசிறந்த ஒரேவொரு ஊழி யர்" என்று யாராவது சொல்லும்போது அது தேவனுடைய கோட்பாடு இல்லை என்று நாம் சொல்லு வோம். அது தடுப்புச்சுவரை உண்டாக்கும். "சரி, அப்படியானால் நீதான் தலைவனாகிவிடுவாய் போலிருக்கிறதே!" என்று சொன்னால், அப்படியில்லை. நான் சொல்வதை நீங்கள் கேட்க வேண்டும் என்ற அவசியம் இல்லை. எனக்குத் தெரிந்தபடி சகோதர்கள் பவுல், பேதுரு, யோவான் போன்றோர் தேவனுடைய சத்தியத்தை வழங்கியிருக்கிறார்கள். இந்த சத்தியங்களை நீங்கள் படித்தால் கிறிஸ்து உங்களுக்குள் வளர்வதற்கு அவை போதுமானவைகளாக இருக்கும். நான் சொல்வதை நீங்கள் கேட்கவேண்டிய அவசியம் இல்லை. இது முதலாவது.

இரண்டாவது, நாம் ஒருவரோடொருவர் உறவுகளைக் கட்டுவது என்பது எளிமையானது இல்லை. நான் பிரச்சினைகளைச் சொல்லுகிறேன். ஒரு குடும்பம் அல்லது ஓர் அலுவலகம். அலுவலகத்தில் எல்லாரும் இரட்சிக்கப்பட்டிருக்க வேண்டும் என்ற அவசியம் இல்லை. என்னுடைய அலுவலகத்தில் எல்லாரும் இரட்சிக்கப்பட்டவர்கள். நான் இப்போது வேலையைப் பகிர்ந்துகொடுக்கிறேன். "தேர்வு சம்பந்தப்பட்ட வேலையையெல்லாம் நீங்கள் பார்த்துக்கொள்ளுங்கள். மாணவர்களுக்கு வேலை வாய்ப்புத் தேடிக் கொடுக்கும் பொறுப்பை நீங்கள் எடுத்துக்கொள்ளுங்கள். காலஅட்டவணையை நீங்கள் போடுங்கள். கணினி சம்பந்தமான விஷயங்களை நீங்கள் பார்த்துக்கொள்ளுங்கள்," என்று வேலையைப் பகிர்ந்து கொடுத்துவிடுகிறேன். திடீரென்று ஒரு புதிய வேலை வருகிறது. "இப்போது இந்த வேலையை யார் பார்க்கப்போகிறீர்கள்?" என்று கேட்கும்போது எல்லாரும் அமைதியாக இருக் கிறார்கள். இது நம் வீட்டிலேயே நடக்கும். எல்லாரும் அமைதியாக இருப்பார்கள். அதற்குக் காரணம் என்ன? "ஏற்கெனவே நீங்கள் நிறைய வேலை எனக்குத் தந்துவிட்டீர்கள்" என்பதுதான் பொருள்.

எங்கே நாம் கூடிவாழ்கிறோமோ அங்கு நாம் வேலைகளையும், வளங்களையும் பகிர்ந்துகொள்ள வேண்டிய நிர்ப்பந்தம் உண்டு. எங்கெல்லாம் நாம் வேலைகளையும், பொறுப்புக்களையும் பகிர்ந்து கொள்கிறோமோ அங்கெல்லாம் பிரச்சினை இருக்கும். "எனக்கு நீங்கள் நிறைய வேலை கொடுக் கிறீர்கள். மற்றவருக்கு நீங்கள் குறைவான வேலை கொடுக்கிறீர்கள்." இது ரொம்ப seriousஆன விஷயம். எந்தவிதமான நெருடலும் இல்லாமல் வேலைகளை எப்படிப் பகிர்ந்துகொள்வது என்று ஒரு சூத்திரம் கண்டுபிடிக்கலாமா? அங்கு ஆரம்பிக்கலாமா? அங்கு ஆரம்பித்தால் நடக்காது. என் னோடு வேலை செய்பவர்களிடம், "நான்தான் இந்தத் துறைக்குத் தலை. நீங்கள் என்னை நம்ப வேண்டும். ஒவ்வொருவருடைய வேலைப்பளு எவ்வளவு என்று எனக்கு எல்லாம் தெரியும். என்னை நம்புங்கள். எல்லாருக்கும் நான் வேலைப்பளுவை சரிசமமாகத்தான் பகிர்ந்துகொடுக்கிறேன்," என்று சொன்னால் நம்புவாங்களா? விழுந்துபோன மனிதனுடைய சுபாவம், "எப்போதும் எனக்குத்தான் நிறைய வேலை. உலகத்திலே நான்தான் நிறைய கஷ்டம் அனுபவிக்கிறேன். என்னுடைய கஷ்டத்தை யாருமே புரிந்துகொள்வதேயில்லை," என்று புலம்பும். ஆனால், இங்கு ஆரம்பிக்கக் கூடாது. எங்கு ஆரம்பிக்க வேண்டும் என்றால் ரோமரில் நாம் ஒரு வசனம் பார்த்தோம். "சந்தோஷப்படுகிறவர்களுடனே சந்தோஷப்படுங்கள். அழுகிறவர்களுடனே அழுங்கள்." இதற்குப் பெயர் empathy.

**உடன்-உணர்தல்**

நம் உறவுகள் வலுவடைய வேண்டும் என்றால் நாம் முதன்முதலாக என்ன செய்ய வேண்டும் என் றால் நம்மை அவருடைய இடத்தில் வைத்து அவருடைய எண்ணங்களையும், உணர்ச்சிகளையும் நாம் அனுபவிக்க வேண்டும். "நம்முடைய பலவீனங்களைக்குறித்துப் பரிதபிக்கக்கூடாத பிரதான ஆசாரியர் நமக்கிராமல், எல்லாவிதத்திலும் நம்மைப்போல் சோதிக்கப்பட்டும், பாவமில்லாதவரா யிருக்கிற பிரதான ஆசாரியரே நமக்கிருக்கிறார்" *(எபிரெயர் 4:15)*. கிரேக்க வார்த்தை sympatheo. அப்படியென்றால் co-feel என்று பொருள். இது அவ்வளவு நல்ல ஆங்கிலம் கிடையாது. ஆனால், புதிய ஏற்பாட்டில் இப்படிப்பட்ட பதம் அடிக்கடி பயன்படுத்தப்பட்டுள்ளது. நாம் அவருடன் co-crucified with him. We were co-risen with him. ஆனால் ஆங்கிலத்தில் we were crucified together with

him. We were raised together with him என்று எழுதப்பட்டிருக்கிறது. அப்போதுதான் ஆங்கிலத் தில் நேர்த்தியாக இருக்கும். Cocrucified, coraised என்று சொல்வது நன்றாக இல்லை. Lord Jesus Christ cofeels with our weaknesses என்று சொல்வதோ, எழுதுவதோ நன்றாக இல்லை. நாம் பலவீனமாக உணரும்போது, நான் எப்படிப்பட்ட சூழ்நிலையின் வழியாகப் போகிறேனோ, அவர் இதேபோல் மாம்சத்தில் இரத்தத்தில் வாழ்ந்ததால், ஏறக்குறைய அதே சூழ்நிலையின் வழியாக அவர் போயிருப் பதால் என்னுடைய பலவீனங்களை அவர் புரிந்துகொள்கிறார். இதை உங்களால் கற்பனை செய்து பார்க்க முடிகிறதா? அவர் நம் பலவீனங்களுடன் சேர்ந்து உடன்-உணர்கிறார். இல்லையென்றால் அவர் பிரதான ஆசாரியராக இருக்க முடியாது. நான் உறவுகொள்ள வேண்டுமானால் நான் மற்ற வர்களுடைய உணர்ச்சிகளை cofeel பண்ண வேண்டும். இதுதான் சந்தோஷப்படுகிறவர்களுடனே சந்தோஷப்படுவதாகும், அழுகிறவர்களுடனே அழுவதாகும். ஒரு சகோதரர் அழுதுகொண்டிருக் கிறார் என்று வைத்துக்கொள்வோம். நான் என்ன செய்ய வேண்டும்? அவனுடன் சேர்ந்து அழ வேண்டும். அப்படியானால் என்ன அர்த்தம்? அவனோடு சேர்ந்து coweep பண்ண வேண்டும். இது தான் உறவுகளைக் கட்டுவதற்கான முதல்படி. என்னுடைய மகனோடு அல்லது என்னுடன் சேர்ந்து வேலைசெய்பவரோடு சேர்ந்து நான் cofeel பண்ண வேண்டும். இது இயற்கையாக வராது. Sympathize or empathize. ஆங்கிலத்தில் put yourself in his shoes என்று சொல்வார்கள்.

தேவனிடம் ஜெபிக்க வேண்டும்: "ஆண்டவரே, நான் என் மகளுடன் cofeel பண்ண விரும்புகிறேன். என்னுடன் வேலை செய்பவருடன் cofeel பண்ண விரும்புகிறேன். என் சகோதரருடன் cofeel பண்ண விரும்புகிறேன். என் மனைவியுடன் cofeel பண்ண விரும்புகிறேன்." இதன் பொருள் அவர்களுடைய வாய் நாற்றம், அவர்களுடைய socks நாற்றம், அவர்களுடைய சில character வெட்டு ஒன்று துண்டு இரண்டு என்று பேசுவார்கள். எல்லாவற்றையும் jokeஆகவே பேசுவார்கள். மற்றவர்களை எப் போதும் கேலிபண்ணுவார்கள். ஆனால், அவர்களைப்பற்றி மட்டும் ஒரு கிண்டலோ கேலியோ பண்ணமாட்டார்கள். இந்த ஒரேவொரு வார்த்தையைப்பிடித்துக் கொள்ளுங்கள். cofeel. நான் management technique சொல்லவில்லை. இது வேதாகமம். நாம் இதைக் கற்றுக்கொள்வதற்குப் பதிலாக, "நீங்கள் ஆவியில் நிறைந்து அந்நிய பாஷை பேசுங்கள் அல்லது கர்த்தராகிய இயேசுவே என்று 10 தடவை சொல்லுங்கள்," என்றால் உறவு மேம்படுமா? என்னுடைய உறவு மேம்பட்டு விடுமா? ஆகாது. என்னுடைய ஆவியை நான் பயிற்சிசெய்கிறேன் என்பது உண்மைதான்.

ஆனால், சபையில் ஒருவரோடொருவருக்குள்ள நம் உறவுகளை நாம் எப்படி வளமாக்க வேண்டும். அல்லது வலுவாக்க வேண்டும் என்பதற்குப் புதிய ஏற்பாட்டில் போதுமான வார்த்தைகள் இருக்கின் றன. கலாத்தியரில் ஒருவர் பாரத்தை ஒருவர் சுமந்து…அவனவன் தன்தன் பாரத்தைச் சுமப்பானே. இதன் பொருள் என்னவென்றால் நாம் ஒரு கூட்டுவாழ்க்கை வாழும்போது எனக்கு ஒரு பளு இருக்கிறது. துறையில் எனக்கு ஒரு பங்கு இருக்கிறது. அந்த சுமையை நான்தான் சுமக்க வேண் டும். வீட்டில் வாழ்கிறோம். அங்கு ஒவ்வொருவருக்கும் ஒரு பங்கு இருக்கிறது என்பதை ஒவ்வொரு வரும் உணர வேண்டும். கலாத்தியர் 5ஆம் அதிகாரத்தில் அவர் கூட்டு வாழ்க்கையைப்பற்றிப் பேசு கிறார். நீங்கள் ஒருவரையொருவர் பட்சிக்காதீர்கள். கூட்டுவாழ்க்கையில் உன்னுடைய பங்கு, வேலை என்னவோ அந்த வேலையை நீ சுமக்க வேண்டும். அதற்குமுன் ஒருவர் பாரத்தை ஒருவர் சுமந்து..எனக்கு ஒரு சுமை இருக்கிறது. பல சமயங்களில் தண்ணீர் சுமக்கிறது என் வேலை இல்லை. அது மற்றவனுடைய வேலை. இங்கு எந்த வசனம்தான் பொருந்தும்? ஒருவர் பாரத்தை ஒருவர் சுமந்து…இந்த வசனம் எல்லாருக்கும் பொருந்தும். கொஞ்சம் நேரம், கொஞ்சம் பணம், கொஞ்சம் உழைப்பு எல்லாவற்றுக்கும் மேலாக இருதயம். ஆரம்பம் எங்கிருக்கிறது? Love and cofeel. இந்த ஆரம்பத்தை விட்டுவிட்டு நாம் பெரிய management technique பயன்படுத்தினால் இந்த technique வேலைக்கு உதவாது. Love and cofeel. Amen